Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month 4 Pages 

# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION Film - 18 Click - 06 SEPTEMBER 2022 Re. 1

**சங்க உறுப்பினர்களே!**
**சங்கத்தில் தொடர்ந்து**
**ரினிவல் செய்து பயன்பெறுவீர்**

- CVPA

## CVPA உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் வகையில் 2019 பொதுக்குழு தீர்மானப்படி சென்னை வீடியோ போட்டோகிராபர்ஸ் பப்ளிக் சாரிட்டபுள் டிரஸ்ட் மறு சீரமைக்கப்படுகிறது!

நமது சங்கத்தில் உறுப்பினராக உள்ள அனைவருக்கும் தற்போது 3 லட்சம் ரூபாய் வரை விபத்து காப்பீடு செய்யப்படுகிறது. அதேசமயம் இயற்கை மரணங்களுக்கு ஈமச்சடங்கு செய்ய 20,000 ரூபாய் வழங்கப்படுகிறது. சிறிய விபத்தில் சிக்கும் உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்கு, உரிய வகையில் சங்கத்தில் வைப்பு நிதி இல்லாத காரணத்தால், நமது சங்க பணத்தில் இருந்து, உறுப்பினர்களின் ரெனிவலின் தகுதிகேற்ப மருத்துவ சிகிச்சைக்கு பணம் வழங்கப்படுகிறது.

தற்போது சங்க உறுப்பினர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, 2019 பொதுக்குழு தீர்மானத்தின்படி, சென்னை வீடியோ போட்டோகிராபர்ஸ் பப்ளிக் சாரிட்டபிள் டிரஸ்ட் மறு சீரமைப்பு செய்யும் பணி தொடங்கியுள்ளது. மேலும், ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த சாரிட்டபிள் டிரஸ்டின் ரெஜிஸ்ட்ரேஷன் மற்றும் வங்கிக் கணக்கு ஆகியவை மீண்டும் செயல்பாட்டிற்கு வர உள்ளன. இதன்படி இந்த ட்ரஸ்டில் இருந்து சிலர் தங்களை விடுவித்துக் கொண்டுள்ளனர். இவர்களைத் தவிர மேலும் சிலர் விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளனர். இதனால் இந்த ட்ரஸ்டில் மேலும் பல புதிய உறுப்பினர்கள் இணைய விருப்பம் தெரிவித்துள்ளனர். ட்ரஸ்டில் இணைய விரும்பும் நபர்கள் கௌரவ உறுப்பினர்களாக அழைக்கப்படுவார்கள். அவர்கள் ட்ரஸ்ட்டிற்கு நன்கொடையாக 10 ஆயிரம் ரூபாய் செலுத்தி இந்த டிரஸ்டில் இணைந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. இந்த ட்ரஸ்டில் புதிய உறுப்பினர்கள் சேர, செப்டம்பர் 25ஆம் தேதி கடைசி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆர்வம் உள்ளவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு நமது சங்கம் சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சென்னை வீடியோ போட்டோகிராபர்ஸ் பப்ளிக் சாரிட்டபிள் டிரஸ்ட்டிற்கு ரெனிவல் செய்யும் உறுப்பினர்களின் தொகையிலிருந்து 250 ரூபாய் சாரிட்டபுள் டிரஸ்ட்டிற்கு சென்றடைவதால், இனி சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் யாவும், இந்த ட்ரஸ்டின் மூலமாகவே உறுப்பினர்களின் ரெனிவலின் தகுதிக்கேற்ப நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன டிரஸ்ட் சீரமைப்பு பணி நிறைவடைந்த பிறகு, இதன் முழு விவரங்கள் வெளியிடப்படும்.




## CVPA வில் 75வது சுதந்திர தினவிழா

75வது சுதந்திர தின விழா நாடெங்கும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நமது CVPA அலுவலகத்தில் சங்க செயலாளர் DM. பிரேம்குமார் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். சங்கத் தலைவர் செல் செல்வம் அவர்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகள் - செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில துணைத் தலைவர், முன்னாள் நிர்வாகிகள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டார்கள்.



183வது உலகப் புகைப்பட தினம் உலகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நமது சென்னை வீடியோ மற்றும் புகைப்படக் கலைஞர்கள் சங்கம் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில்,CVPA கௌரவத் துணைத் தலைவர் . கலைமாமணி திரு. யோகா அவர்கள் கலந்து கொண்டு, கேக் வெட்டி சங்க உறுப்பினர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்.

## சீரியல் எண்களை கவனமாக பார்த்து வாங்குங்கள்

நமது சங்க உறுப்பினர் முகமது முஸ்தபா (ஐடி எண். 2883) அவர்கள் கடந்த ஜூன் மாதம் நிகான் டீலரிடம் கேமரா மற்றும் லென்ஸ் வாங்கியிருந்தார். இது வாங்கியதற்காக கொடுக்கப்பட்ட பில்லில் தவறுதலாக சீரியல் எண்கள் இருந்ததை இரண்டு தரப்பினரும் கவனிக்க தவறி விட்டனர். லென்ஸ் சர்வீஸ் சென்டருக்கு சென்ற பிறகுதான் இந்த தவறு கண்டறியப்பட்டது. இதனால் இரண்டு தரப்பினருக்கும் பிரச்சனை ஏற்பட்டது. இது குறித்து சங்க அலுவலகத்திற்கு புகார் வந்தது. உடனடியாக சங்க நிர்வாகிகள் டீலரை தொடர்பு கொண்டு கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. நமது சங்க உறுப்பினருக்கு புதிய லென்ஸ் டீலர் மூலமாக வழங்கப்பட்டது. இதற்காக சங்கம் சார்பாக அந்த டீலருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. இப்போது நாம் வாங்கும் எல்லா கேமராக்களுக்கும் வாரண்டி கொடுக்கப்படுகிறது. எனவே இந்த பில் விஷயத்தில் கவனத்துடன் இருக்குமாறு சங்க உறுப்பினர்களை கேட்டுக்கொள்கிறோம்.



183 வது உலக புகைப்பட தினத்தையொட்டி நமது சங்கத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், நமது சங்க உறுப்பினர் திரு. குகன் (ID 5445) அவர்களின் மகள் ஜெயஸ்ரீ கம்போடியாவில் நடைபெற உள்ள கிக் பாக்ஸிங் போட்டியில் பங்கு பெறுவதற்கு பண உதவி கேட்டு சங்கத்திற்கு கோரிக்கை விடுத்தார். சங்க நிர்வாகிகள் அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்கள். CVPA மற்றும் TVPA சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் சில சங்க உறுப்பினர்கள் சார்பாகவும் அவருக்கு ரூபாய் 35 ஆயிரம் கொடுத்தனர். இந்த நிதியை நமது சங்கத்தின் கௌரவத் துணைத் தலைவர் கலைமாமணி திரு யோகா அவர்கள் CVPA நிர்வாகிகள் - செயற்குழு உறுப்பினர்கள், முன்னாள் நிர்வாகிகள் முன்னிலையில் ஜெயஸ்ரீயிடம் வழங்கினார். ஜெயஸ்ரீ அவர்கள் கிக் பாக்ஸிங் போட்டியில் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.



நமது சங்க உறுப்பினர் சரவணன் (ID 2874) அவர்களின் வரவேற்பு நிகழ்ச்சியில் CVPA துணைத் தலைவர் வேலு அவர்கள் CVPA சார்பாக கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.



நமது சங்க உறுப்பினர் நாகராஜ் அவர்களின் திருமண நிகழ்ச்சியில் CVPA சார்பாக நிர்வாகிகள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

## அறிவிப்பு

அன்பார்ந்த சங்க உறுப்பினர்களுக்கும், நம் தொழில் சார்ந்த நண்பர்களுக்கும் ஒரு முக்கிய அறிவிப்பு!

நம் சங்க வளர்ச்சிக்கு இது நாள் வரை தோளோடு தோள் கொடுத்து உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும், எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விளம்பரதாரர்களாகிய உங்களுடைய பேராதரவுடன்தான் நமது சங்க நிகழ்ச்சிகள் யாவும் இது வரை பிரம்மாண்டமாக நடந்தேறியுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் நீங்கள் சங்க உறுப்பினர்களின் வளர்ச்சிக்காக கொடுத்து வந்த விளம்பரத்தின் பயனாக சங்க உறுப்பினர்களுக்கு முறையாக CVPA NEWS, காலண்டர் மற்றும் டைரி ஆகியவை தவறாமல் வழங்கப்பட்டு வந்ததுடன், CVPA குடும்ப விழாவும் சீரோடும் சிறப்போடும் நடந்து வந்தன.

கொரோனா காலத்தில் நாம் செய்து வந்த வியாபாரம் ஒரே சீராக இல்லாமல் இருந்த நிலையில், நமது தொழிலில் பின்னடைவுகள் ஏற்பட்டு பெரும் பிரச்சனைகளை அனைவரும் சந்தித்து வந்தோம்.இதனால், விளம்பரதாரர்களிடம் இருந்து வரவேண்டிய விளம்பரங்கள் மற்றும் பாக்கித்தொகை அப்படியே நிலுவையில் இருந்துவிட்டது. இதன் காரணமாக, இரண்டு ஆண்டுகள் CVPA NEWS பத்திரிகை கூட உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டு 100 இதழ்கள் மட்டும் வெளியிடப்பட்டன. இந்நிலையில் விளம்பரதாரர்களின் வாரா கடன் நிலுவைத் தொகை குறித்து, நமது சங்க பொதுக் குழுவில் விவாதம் செய்யப்பட்டது. கொரோனா காலம் முடிவுக்குப் பிறகு தற்போது வியாபார நிலை சீராகி இருப்பதாகவும், எனவே கடன் பாக்கி உள்ளவர்களிடம், உடனடியாக கடனை வசூலிக்க வேண்டும் என்று நமது பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வாரா கடன்களை வசூல் செய்ய சங்க பொருளாளர் ஜெயபால் தலைமையில் சிறப்புக் குழு ஒன்று செயற்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் விளம்பரதாரர்கள் சங்கத்திற்கு சேர வேண்டிய, விளம்பரம் மற்றும் நன்கொடை அல்லது வேறு ஏதேனும் வகையில் பாக்கி வைத்திருப்பவர்கள் சங்க நிர்வாகிகளை தொடர்பு கொண்டு பாக்கி தொகையை உடனடியாக செலுத்தி, நமது சங்கத்திற்கு பேராதரவு தரும்படி கேட்டுக்கொள்கிறோம். சங்க உறுப்பினர்களுக்கும், நம் தொழில் சார்ந்த நண்பர்களுக்கும் உள்ள நல்லுறவை தொடர்ந்து பேணிக் காக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு : DM. **பிரேம்குமார்,** CVPA செயலாளர்

# செயற்குழு தீர்மானங்கள்

நிர்வாகத்தின் முதல் நிர்வாகிகள் கூட்டம் 13.8.2022 அன்று நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 16.08.2022 அன்று சென்னை எஸ்விஎஸ் கிளப்பில் முதல் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத் திற்கு CVPA தலைவர் செல்.செல்வம் அவர்கள் தலைமை தாங்கினார். CVPA செயலாளர் DM.பிரேம்குமார் அவர்கள் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் எல்லா செயற்குழு உறுப்பினர்களும் ஆர்வத்துடன் வந்து கலந்து கொண்டனர். வரும் காலங்களில் இந்த நிர்வாகம் சிறப்பாக செயல்பட நல்ல பல ஆலோசனைகளை வழங்கினார்கள். இறுதியாக சில முக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்து, ஏக மனதாக செயற்குழுவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன் விவரங்கள் கீழ் வருமாறு....

நமது பொதுக்குழுவின் தீர்மானப்படி , நம் சங்கத்திற்கு கடன் பாக்கி நிலுவையில் வைத்துள்ளவர்களிடம் உடனடியாக பணத்தை வசூல் செய்ய, பொருளாளர் ஜெயபால் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் இவரோடு இணைந்து செயலாற்ற முன்னாள் பொருளாளர் தற்போதைய பிஆர்ஓ ரவிக்குமார், மற்றும் செயற்குழு உறுப்பினர்களான வண்ணாரப்பேட்டை பகுதி செயலாளர் ரவிக்குமார், திருவொற்றியூர் பகுதி செயலாளர் மேகநாதன், மடிப்பாக்கம் பகுதி செயலாளர் விஜய ராஜா, நுங்கம்பாக்கம் பகுதி செயலாளர் ஆர்டி விஜய், கே.கே. நகர் பகுதி செயலாளர், திருமலை, திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் கணேஷ் இந்த சீர்திருத்த குழுவில் செயல்பட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

நமது சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஐடி கார்டுடன், இனி சங்கத்தின் பெயர் அச்சிடப்பட்ட ரோப் மற்றும் ஹோல்டர் ஆகியவைகளை உறுப்பினர்களுக்கு வழங்க முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநில சங்கத்தில், நமது CVPA சார்பாக அங்கம் வகிக்க போகும், 7செயற்குழு உறுப்பினர்களான 1. தலைவர் செல் செல்வம் 2. செயலாளர் பிரேம்குமார். 3. பொருளாளர் ஜெயபால், 4. பிஆர்ஓ ரவிக்குமார். 5. வட சென்னை துணைத் தலைவர் கவுஸ்பாஷா. 6. மத்திய சென்னை இணைச் செயலாளர் தனகோட்டி 7. தென் சென்னை எஸ்1 இணைச்செயலாளர் செந்தில் குமார் ஆகியோருக்கு மாநில செயற்குழு உறுப்பினர்களாக பணியாற்ற ஒப்புதல் வழங்கப்பட்டது . மேலும் உள்ள 30 பொதுக்குழு உறுப்பினர்களுக்கு, 2022-24ல் நிர்வாகத்தில் இடம் பிடித்துள்ள நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் மட்டுமே இருப்பார்கள் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் குடும்ப விழா நிகழ்ச்சி கொரோனா காலத்தால் தள்ளி போடப்பட்டு வந்தது. இந்த ஆண்டு இவ்விழா நடத்துவது பற்றி இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. சங்கத்திலிருந்து பணம் எடுக்காமல், விளம்பரதாரர்களின் ஸ்பான்சரை கொண்டு மட்டுமே இந்த நிகழ்ச்சியை நடத்தலாம் என்றும். மிகக் குறுகிய காலமாக இருப்பதால் ஸ்பான்சர் கிடைக்காத பட்சத்தில் குடும்பவிழாவை தள்ளி போடலாம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

ரெனிவல் செய்யும் நம் சங்க உறுப்பினர்களுக்கு, வர்த்தக நிறுவனங்களிடமிருந்து சலுகைகளைப் பெற்றுத் தர டிரேடர்களுக்கு கோரிக்கை வைத்து சலுகைகளை பெற்றுத் தரும்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வரும் 2023 ஆண்டில் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நமது சங்கத்தின் டைரி, காலண்டர் ,பாக்கட் டைரி போன்றவற்றை வெளியில் யாரிடமும் கொடுக்காமல் நமது சங்க நிர்வாகிகளே தயாரித்து கொடுக்க வேண்டும் என்று ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. குறைந்தபட்சம் ஒவ்வொரு பகுதி செயலாளரும் ஒரு விளம்பரமாவது வாங்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசு அங்கீகாரம் பெற்ற நமது சங்கத்தை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் விழிப்புணர்வு ஏற்படுத்த, ஆட்டோ மற்றும் டூவீலர் ஸ்கூட்டர் களில் சங்கப் பெயரிட்டு ஸ்டிக்கர் பிரிண்ட் செய்து ஓட்ட வேண்டும் என்று ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நமது சங்க உறுப்பினர்களுக்கு வருடத்திற்கு நான்கு பயிற்சி வகுப்புகள் நடத்த முடிவு செய்யப்பட்டது. இதில் தென் சென்னை எஸ்1 தென் சென்னை எஸ்2 மதிய சென்னை வடசென்னை ஆகிய பகுதிகளுக்கு தலா ஒரு பயிற்சி வகுப்பு நடத்த செயற்குழு ஒப்புதல் அளித்தது

CVPA டிரஸ்டை மீண்டும் புதுப்பொலிவுடன் தொடங்க முடிவு செய்யப்பட்டது. இதன்படி புதியதாக இந்த டிரஸ்டில் இணைய உள்ளவர்கள் செப்டம்பர் 25ஆம் தேதிக்குள் பத்தாயிரம் ரூபாய் சங்க அலுவலகத்திற்கு வந்து செலுத்தி விடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

நமது சங்க அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றுவது குறித்து செயற்குழுவில் ஆலோசிக்கப்பட்டது. அதன்படி குறைந்தது 15 லட்சம் ரூபாய் வரை கொடுத்து லீசுக்கு இடத்தை பிடிக்கலாம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நமது சங்கத்தின் சார்பில் நடைபெற்ற தேர்தலில் விடுபட்ட பகுதிகளுக்கு பணி செய்ய விரும்புவதாக, விருப்பம் தெரிவித்து,16.08.2022 தேதியிட்டு கடிதம் கொடுத்தனர். இதன்படி வில்லிவாக்கம் பகுதிக்கு S.ராஜன் அவர்களும், புரசை பகுதிக்கு A.சீனிவாசன் அவர்களும், தி.நகர் பகுதிக்கு E.C. பழனிவேல் அவர்களும், அசோக் நகர் பகுதிக்கு விஜயகுமார் அவர்களும், விருப்பம் தெரிவித்து கடிதம் கொடுத்தனர். போட்டிக் கடிதம் எதுவும் இல்லாத காரணத்தால் செயற்குழுவில் இவர்களுடைய கடிதம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. A.சீனிவாசன், விஜயகுமார் ஆகியோரிடமிருந்து சங்கத்திற்கு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகைக்கு இவர்களிடமிருந்து காசோலை பெறப்பட்டு வங்கியில் உடனடியாக டெபாசிட் செய்யப்பட்டது. இவ்விருவருக்கும் ஒரு வாரம் பொறுத்திருந்து பகுதி செயலாளர் பொறுப்பு வழங்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. இதில் அசோக் நகர் பகுதி செயலாளர் பதவிக்கு கடிதம் கொடுத்த விஜயகுமார் விலகிக் கொண்டதை அடுத்து அசோக் நகர் பகுதி காலியாக உள்ளதாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

CVPA news க்கு விளம்பர கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது. 12 மாதம் விளம்பரம் கொடுப்பவர்களுக்கு 20%தள்ளுபடியும், 6 மாதம் தொடர்ந்து விளம்பரம் கொடுப்பவர்களுக்கு 10%தள்ளுபடி வவழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விளம்பரமோ செய்தியோ எதுவாக இருந்தாலும் ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் தேதிக்குள் ஆசிரியருக்கு தகவல் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

அழைப்பு விடுக்கும் நமது சங்க உறுப்பினர்களின் இல்ல சுப நிகழ்ச்சிகளில், அந்தந்த பகுதி CVPA துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள்,பகுதி செயலாளர், கூடுமானவரை அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சங்க உறுப்பினர்களை பெருமைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

## செயற்குழு ஒப்புதலுடன் நியமிக்கப்பட்ட புதிய பகுதி செயலாளர்கள்



A.**சீனிவாசன்,**
ID 804
புரசை
பகுதி செயலாளர்



P.C. **பழனிவேல்,**
ID 2342
திநகர் பகுதி
செயலாளர்



S. **ராஜன்,**
ID 2119
வில்லிவாக்கம்
பகுதி செயலாளர்

### சங்க உறுப்பினர்களின் குழந்தைகள் கல்வி கட்டணத்திற்கு வழிகாட்டிய மடிப்பாக்கம் பகுதி செயலாளர் விஜயராஜா!

மடிப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் **ஹரிகரன்** (ID 2699) அவர்களின் மகன் அருணுக்கான கல்வி கட்டணம் 15, 000 ரூபாயும், **உமாபதி** (ID 4753) அவர்களுடைய மகள் கீர்த்தன பிரியாவின் பள்ளிக்கூட கல்வி கட்டணம் 15,000 ரூபாயை, மடிப்பாக்கம் பகுதி செயலாளர் விஜயராஜா அவர்களின் வழிகாட் டுதல் படி சைல்டு கேர் பவுண்டேஷன் மூலமாக பெற்றுத் தரப்பட்டது. இவ் இரண்டு குடும்பத்தினரும் இந்த நற்செயலுக்காக, விஜயராஜா அவர்களை பாராட்டினார்கள். மேலும் ஆறு பேருடைய கல்விக்கட்டணம் பரிசீலனையில் உள்ளது. இது வெகுவிரைவில் பெற்றுத் தரப்படும் என்று மடிப்பாக்கம் பகுதி செயலாளர் விஜயராஜா உறுதியளித்துள்ளார். இவர் பணி மேலும் மேலும் சிறக்க சங்கம் சார்பாக பாராட்டுகிறோம்.



**சரண்யா** S (403/500)
த/பெ. சரவணன்,
(ID 2677)



**சரண்ராஜ்** S (505/600)
த/பெ. சரவணன்,
(ID 2677)

## அறிவிப்பு

வடபழனி, அசோக்நகர், போரூர், ஆதம்பாக்கம், மதுரவாயல் போன்ற பகுதி செயலாளர் பதவி இன்னும் வெற்றிடமாகவே உள்ளது. இந்த பகுதிகளுக்கு பணியாற்ற விருப்பம் உள்ளவர்கள் விருப்பக் கடிதம் கொடுக்கலாம். செயற்குழுவின் மூலம் இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இப்படிக்கு : D.M. பிரேம்குமார், செயலாளர், CVPA

## வருந்துகிறோம்



நமது CVPA சங்கத்தின் மூத்த உறுப்பினரும் மேற்கு மாம்பலம் முன்னாள் பகுதி செயலாளருமான **வெங்கட்ராமன்** (ID 2826) அவர்கள் உடல்நல குறைவால் இயற்கை எய்தினார். CVPA நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், மற்றும் முன்னாள் சங்க நிர்வாகிகள், உட்பட ஏராளமான சங்க உறுப்பினர்கள் அனைவரும் நேரில் வந்து இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். சங்க உறுப்பினர்களின் மறைவுக்கு, CVPA சார்பாக வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை ரூபாய் 20 ஆயிரத்தை சங்க நிர்வாகிகள் அண்ணாருடைய குடும்பத்தாரிடம் வழங்கினார்கள்.



புரசைவாக்கம் பகுதி மூத்த புகைப்பட கலைஞரும், CVPA உறுப்பினருமான **பட்டாபி** (ID 345LM) அவர்கள் இயற்கை எய்தினார். அவருக்கு CVPA சார்பாக சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், முன்னாள் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், உட்பட ஏராளமான சங்க உறுப்பினர்கள் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். அன்னாரின் குடும்பத்திற்கு CVPA சார்பாக வழங்கப்படும் ஈமசடங்கு தொகை 20 ஆயிரம் ரூபாயை CVPA நிர்வாகிகள் அவருடைய குடும்பத்தினரிடம் வழங்கினார்கள்.




YMCA சார்பில் நடைபெற்ற வில்வித்தை போட்டியில் கணேஷ் மஞ்சுநாத் தங்கபதக்கம் வென்றார். இவர் நமது சங்க உறுப்பினர் காமேஷ் ராஜா அவர்களின் இளைய மகன் ஆவார். இவரை சங்கம் சார்பாக பாராட்டுகிறோம்.

## விழிப்புணர்வு பிரச்சாரம்





நம் சங்கம் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில், விழிப்புணர்வு பிரச்சாரம் ஏற்படுத்தும் நோக்கத்துடன், ஆட்டோக்களில் CVPA ஸ்டிக்கரும், சங்க உறுப்பினர்கள் பயன்படுத்தும் டூவீலரில் ஒட்டிக்கொள்ளக் கூடிய வகையில் ரவுண்டு ஸ்டிக்கரும் வழங்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இது CVPA சார்பாக நடைபெற்ற உலக புகைப்பட தினத்தன்று நம் சங்கத்தின் கௌரவத் துணைத் தலைவர் கலைமாமணி திரு. யோகா அவர்கள் முன்னிலையில் விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கி வைக்கப்பட்டது. டூவீலர் ஸ்டிக்கர் தேவைப்படுவோர் சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



### கௌரவத் தலைவரின் முதலாம் ஆண்டு நினைவு நாள்

நமது சங்கத்தின் கௌரவத் தலைவர் சரவணா வீடியோஸ் கணேசன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சங்க நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள், முன்னாள் சங்க நிர்வாகிகள் ஆகியோர் அவருடைய படத்திற்கு பூ தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.






மாநில சங்கம் சார்பாக ஏற்கனவே முடிவு செய்யப்பட்டபடி வரும் அக்டோபர் மாதம் 14 ,15,16 ஆகிய தேதிகளில் சென்னை, நந்தம்பாக்கம், டிரேட் சென்டரில், டிஜிமீடியா எனும் போட்டோ வீடியோ கண்காட்சி மிக பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் ப்ரோமோ நிகழ்ச்சிக்காக வந்திருந்த மாநிலத் தலைவர் சிவக்குமார் அவர்கள் நமது செயற்குழுவில் இதற்கான போஸ்டரை வெளியிட்டார்.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**

Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351

If undelivered please return to
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 14.09.2022

**To**